


**28. 07. 2025**

தலைப்பு செய்திகள்

1. பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்றும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

2. தெருநாய்களின் தாக்குதல் தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் தாய், சேய் இறப்பு விகிதம் பெருமளவு குறைந்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. மேட்டூர் அணைக்கு வரும் ஒரு லட்சம் கனஅடி உபரிநீர் முழுவதும் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. ஜார்ஜியாவில் ஃபிடே மகளிர் செஸ் உலக சாம்பியன்பட்ட போட்டியின் டை பிரேக்கர் சுற்றில் கொனேரு ஹம்பி - திவ்யா தேஷ்முக் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா கேள்வி நேரத்தை எடுக்க முயன்ற போது பீஹார் பிரச்சனையை எழுப்பி எதிர்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.

கேள்வி நேரம் முக்கியமானது என்பதால் எதிர்கட்சிகள் அதில் பங்கேற்க வேண்டும் என்று அவைத்தலைவர் கோரினார்.

ஆனால் எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து தொடர்ந்து கூச்சல் குழப்பங்களோடு அமளியில் ஈடுபட்டனர்

அமளியினூடே ஜல்சக்தி அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், தூய்மை பசுமை திட்டம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்தார்.

எதிர்கட்சிகளின் முழக்கம் தொடரவே மக்களவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியல் ஈடுபட்டதால் பிற்பகல் 2 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு தேர்வான திரு. தனபால், திரு.இன்பதுரை ஆகியோர் உறுப்பினர்களாக இன்று பதவியேற்றுக் கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖

**மக்களவை**

**மக்களவையில் பஹல்காம் தீவிரவாத** தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்த சிறப்பு விவாதம் **இன்று** நடைபெறவுள்ளது.

ஆளும் கட்சி சார்பில் அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜெய்சங்கர் ஆகியோர் இந்த விவாதத்தின் மீது பேசவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

**கிரண் ரிஜுஜு**

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான விவாதத்திலிருந்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் விலகி ஓடுவதாக நாடாளுமன்ற விவாகாரத்துறை அமைச்சர் திரு. கிரண்ரிஜுஜு குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்த விவகாரம் குறித்து இன்று முக்கியமான விவாதம் நடைபெறவிருந்த நிலையில் எதிர்கட்சிகள் வேண்டுமென்றே பீஹார் விவகாரத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வலியுறுத்துவதாக குறைகூறினார்.

எதிர்கட்சிகள் தான் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் வேண்டுமென்று கோரிய நிலையில் தற்போது அதிலிருந்து ஓடுவதாக திரு. ரிஜுஜு குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**பிரல்ஹாத் ஜோஷி**

ஆபரேஷன் சிந்தூர் விவகாரத்தில் காங்கிரஸ் உறுப்பினர் திரு. ப.சிதம்பரம் தெரிவித்த ஒரு கருத்திற்கு மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், திரு. ப.சிதம்பரத்தின் கருத்துக்கள் பாகிஸ்தானுக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று குறைகூறினார்.

பி.ஜே.பி. உறுப்பினர் திரு. அனுராக் சிங் தாகூர், திரு. ப.சிதம்பரத்தின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்து பேசுகையில், தேசத்தை காப்பதற்காக முப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு காங்கிரஸ் ஆதாரம் கோருவதாக குற்றம் சாட்டினார்.

பி.ஜே.பி. உறுப்பினர் திரு. ராஜீவ் பிரதாப் ரூடியும் திரு. ப. சிதம்பரத்தின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

## தெரு நாய்கள்

**தலைநகர் டெல்லியில் சிறு குழந்தைகள் மீதான தெருநாய்களின்** தாக்குதல் அதிகரித்து வரும் சூழலில் இதுதொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாகவே முன்வந்து வழக்கு பதிவுசெய்துள்ளது.

சிசுக்கள் குழந்தைகள், மூத்த குடிமக்கள் மீது தடுப்பூசி செலுத்தப்படாத தெருநாய்களின் தாக்குதலால் ரேபிஸ் நோய் பரவி வருவது குறித்த ரிட் **மனுவை** உச்சநீதிமன்றம் பதிவு செய்துள்ளது.

இதனால் எழுந்துள்ள நிலைமை மிகவும் ஆபத்தாக உள்ளது என்று எடுத்துரைத்த நீதிபதி ஜே.பரிதிவாலா தலைமையிலான அமர்வு இவ்விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி **B.R.**கவாயின் உத்தரவிற்காக உரிய சான்றுகளுடன் வைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

## ஷிவ்ராஜ்சிங் சௌஹான்

**உலக இயற்கை பாதுகாப்பு தினம் இன்று** கடைபிடிக்கப்படுகிறது.

இயற்கையை பாதுகாக்க நாட்டுமக்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.ஷிவ்ராஜ்சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இயற்கை வளம் செழிப்புடன் இருந்தால் மட்டுமே மனிதவாழ்வு ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்று சமூக வலைதளத்தில் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**உதயநிதி**

**தமிழக கிராமப்புற பகுதிகளில் சுகாதாரத் திட்டங்கள்** முனைப்புடன் செயல்படுத்தப்படுவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு செவிலியர் அவையம் சார்பிலான நூற்றாண்டு விழாவில் இன்று உரையாற்றிய அமைச்சர், தாய் சேய் இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் பெருமளவு குறைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சிறந்த செவிலியர் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**மெய்யநாதன்**

**தமிழ்நாட்டில் நிதி பற்றாக்குறையின் மத்தியிலும்** மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் அரசு செயலாற்றி வருவதாக மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் காட்டுச்சேரி கிராமத்தில் அங்கன்வாடி கட்டட திறப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், மருத்துவர்களின் நலன் கருதி அவர்களின் இருப்பிடம் அருகிலேயே பணியாற்ற அரசு வழிவகை செய்துள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**டி.ஆர்.பி.ராஜா**

**தமிழ்நாட்டில் மின்னணு உதிரிபாக நிறுவனங்களை தொடங்க** வெளிநாட்டு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்து 60 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக கூறினார். சிறந்த உள்கட்டமைப்பு காரணமாக தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் விரும்புவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

**மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியதையடுத்து** ஒருலட்சம் கனஅடி உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் சேலம், ஈரோடு, திருச்சி, தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிக்கிறது

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு** ஒருலட்சத்து 15 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

**நாமக்கல் குமாரபாளையம், பள்ளிப்** பாளையத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

**ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையிலிருந்து உபரிநீர்** முழுவதும் வெளியேற்றப்படுவதால் கூடுதுறையில் 30க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் வெள்ளநீரால் சூழ்ந்துள்ளன.

கரூர் மாயனூர் கதவணைக்கு 99 அயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கும் நிலையில் கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திருச்சி முக்கொம்பு அணைக்கு 58 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கும் நிலையில், கொள்ளிடத்தில் 34 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பயிர் காப்பீடு - வாய்ஸ்

**பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில்** பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசம் வரும் 31-ம் தேதியுடன் முடிவடைவதால் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பயிர்களை காப்பீடு செய்துகொள்ள மாவட்ட வேளாண் இணை இயக்குநர் திருமதி. வசந்தா அறிவுறுத்தியுள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

## லாரி வேலை நிறுத்தம்

**தஞ்சை மாவட்டத்தில் நெல் சேமிப்பு கிடங்கில் இருந்து அரிசி மூட்டைகளை** எடுத்துச்செல்லும் லாரிகளுக்கு கடந்த 2 ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ள வாடகை நிலுவை தொகையை உடனடியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி லாரி உரிமையாளர்கள் இன்றுமுதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அறுவடை பணிகள் நடைபெற்று வரும் சூழலில் இந்த போராட்டத்தால் பணிகள் முடங்கியுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

## கோவில்

**விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள்** திருக்கோவிலில் பிரசித்தி பெற்ற ஆடிப்பூர தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

**விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு** அங்காளம்மன் திருக்கோவிலில் ஆடிப்பூரத்தை ஒட்டி அம்மனுக்கு 2 லட்சத்திற்கும் மேலான வளையல்களால் அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

## செஸ்

**ஜார்ஜியாவில் ஃபிடே மகளிர் செஸ் உலக** சாம்பியன்பட்ட போட்டியின் டை பிரேக்கர் சுற்றில் கொனேரு ஹம்பி - திவ்யா தேஷ்முக் இன்று களமிறங்குகின்றனர்.

முன்னதாக நேற்று நடைபெற்ற 2-வது இறுதி ஆட்டமும் டிராவில் முடிவடைந்ததையடுத்து டை பிரேக்கர் சுற்று இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

## ஹாக்கி

**15-வது ஹாக்கி தேசிய ஆடவர் சப் ஜூனியர்** சாம்பியன் பட்ட போட்டிகள் சென்னை **MRK** ஹாக்கி மைதானத்தில் இன்று தொடங்கின.

கேரளம் - ஆந்திர பிரதேசத்தையும்

மணிப்பூர் - தெலங்கானாவையும் இன்று எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

## டென்னிஸ்

கஜகஸ்தானில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் தகுதிசுற்று இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் - ஜார்ஜியாவின் Zura-வை தற்போது எதிர்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖